நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.649 /2024

## P.W. 6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகம் |
| தந்தை / கணவர் பெயர் | : | வடிவேல் |
| கிராமம் | : | சூரப்பள்ளி கிராமம், பாப்பாத்திகாடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 15–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.55 PM

1. நான் தற்போது பாப்பாத்திகாட்டில் குடியிருக்கிறேன். நான் LIC யில் முகவராக வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள் ஆவார். அ.சா.1 ற்கும் எதிரிகளுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சம்பவத்தின்போது அ.சா.1 தான் எதிரிகளை

அடித்தார். வேறொன்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. நான் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஜீவானந்தம் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 ஜீவானந்தத்தின் சகோதரி என்றால் சரிதான். அவரும் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கும் அ.சா.1க்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.
2. சம்பவதன்று எதிரி ஜீவானந்தம் அவர் வீட்டில் இருந்தபோது அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் எதிரி ஜீவானந்தம் வீட்டிற்கு முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்தபோது எதிரி உதயபாரதி கெட்டவார்த்தையால் அ.சா.2 ஐ திட்டி துப்பட்டாவை பிடித்து இழுத்து பெல்டால் வலதுப்பக்க முதுகில் அடித்ததாகவும் அங்கிருந்த ஹாக்கி மட்டையை எடுத்து அ.சா.1 ஐ அடித்ததில் அவருக்கு வலதுகை மோதிரவிரலில் அடிப்பட்டது என்றும்,எதிரி நிர்மலா அ.சா.1 ன் சேலையை பிடித்து இழுத்து மண்ணென்ணெய் கேனை தூக்கி வீசி இவர்களை எறித்து விடுங்கடா என்று கெட்டவார்த்தையால் திட்டியதாகவும், அதை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னுடைய உறவினர்கள் என்பதால் அவர்களுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.00 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.